செ.வெ.எண் -44 நாள்:23.02.2018

# பத்திரிக்கைச் செய்தி

## கால் மற்றும் வாய் நோய் தடுப்பூசிப் பணி

அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த வரும் விவசாய பெருங்குடி மக்களே தங்கள் கால்நடைகளை நல்ல முறையில் பேணிக்காத்து வளர்த்து வருகின்றீர்கள். அக்கால்நடைகளை தாக்கும் முக்கிய நோய்களில் ஒன்று கால் மற்றும் வாய் நோய் என்கிற கோமாரி (கசப்பு) நோய். இந்நோய் 63 வகையான வைரஸ் கிருமிகளால் பரவுகிறது. மழைக்காலத்திலும், பனிக்காலத்திலும் இக்கிருமியானது தண்ணீர் மூலமாகவும், காற்றின் மூலமாகவும் மிக விரைவில் பரவக்கூடியது.

இந்நோயினால் பாதிக்கப்பட்ட கால்நடைகளின் வாயிலும், நாக்கிலும், கால் குளம்புகளுக்கிடையிலும் புண்கள் ஏற்படும். அவைகள் தீனி உட்கொள்ள முடியாமல் மிகவும் பாதிக்கப்படும். மிகவும் மெலிந்துவிடும். வெயில் காலத்தில், நோயினால் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு மூச்சிரைக்கும். தோலின் தன்மை கடினமாகவும், தோல்மயிர்கள் அதிகம் வளர்ந்தும் காணப்படும். பால் கறவை குறையும். கறவைப்பசுக்களில் பால் குடித்துவரும் கன்றுகள் உடனடியாக இறந்துவிடும்.

எனவே, இந்நோய் தாக்கா வண்ணம் இருப்பதற்கு, மாடுகளுக்கு வருடத்திற்கு இருமுறை தடுப்பூசிப் பணி மேற்கொள்வது ஒன்றே சிறந்த நிவாரணம். இம்மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறையினரால், கால் மற்றும் வாய் நோய் தடுப்புத் திட்டம் 14-வது சுற்றின் கீழ் **01.03.2018 முதல் 21.03.2018 முடிய கால் மற்றும் வாய் நோய் தடுப்பூசிப்பணி** மேற்கொள்ளப்பட உள்ளது. ஆகையால், கால்நடைகள் வளர்ப்போர் தங்கள் கிராமத்திற்கு தடுப்பூசி குழுவினர் வரும்பொழுது 3 மாதம் வயதுள்ள கன்று முதல் சினை, கறவை உள்ளிட்ட தங்களின் அனைத்து மாடுகளுக்கும் தவறாமல் கால் மற்றும் வாய் நோய் தடுப்பூசி போட்டுக்கொள்ளும்படி, மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) **திரு.சே.தனசேகரன்** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.